**World Christian Fellowship**
www.wcflondon.com
wcflondon@gmail.com

# கலாத்தியர் – பாடம் 07 – தன்னுடைய அப்போஸ்தல அழைப்பை பாதுகாத்தல் – மனமாற்றம்

**கலாத்தியர் 1:15 – 16, அப்படியிருந்தும், நான் என் தாயின் வயிற்றிலிருந்தது முதல், என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்,** 16. **தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது, உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணாமலும்;**

மனிதர்களின் வாழ்க்கை வரலாற்றில் ஒரு பெரும் சம்பவம் நடந்தது! சவுல் என்ற ஒரு மனிதன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சந்தித்து பவுல் ஆனான்.

இந்த மாற்றம் கிறிஸ்தவமண்டல வரலாற்றை மாற்றியது! சவுல்/பவுலின் வாழ்க்கையின் விவரங்களை நாம் அறிந்திருக்கிறோம். அதனை இப்போது மீண்டும் சுருக்கமாக காணலாம்.

- பிறப்பினால் ஒரு யூதன் அல்லது ரோமன்
- நம்பிக்கையினால் ஒரு பரிசேயன்
- கல்வியினால் ஒரு கிரேக்கன்
- கிருபையினால் ஒரு கிறிஸ்தவன்

*மாற்றத்திற்கு பிறகு அவர் ஒரு,*

- ✓ *களப்பணியாளர்- மிஷினரி (a missionary),*
- ✓ *வேதபண்டிதர் (a theologian),*
- ✓ *சுவிசேஷகன் (an evangelist),*
- ✓ *மேய்ப்பர்,*
- ✓ *பிரசங்கி,*
- ✓ *போதகர்,*
- ✓ *ஒருங்கிணைப்பாளர்,*
- ✓ *தலைவர்,*
- ✓ *சிந்தனையாளர்,*
- ✓ *அரசியலாளர்,*
- ✓ *போராளி , மற்றும்*
- ✓ *இயேசு கிறிஸ்துவை நேசிப்பவர் மற்றும்*
- ✓ *அனைத்தையும் ஒரே சமயத்தில் வெளிப்படுத்தினார்.*

*எனவே நாம் அவரது மாற்றத்தை புரிந்து கொள்வது மிகவும் முக்கியம்.*

***அப்போஸ்தலர் 9: 1-9***, *[1] சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய
சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான
ஆசாரியரிடத்திற்குப் போய்; [2] இந்த மார்க்கத்தாராகிய
புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான்
கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக்
கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு*

*நிருபங்களைக் கேட்டு வாங்கினான். [3]அவன் பிரயாணமாய்ப்
போய், தமஸ்குவுக்குச் சமீபித்தபோது சடிதியிலே
வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது;
[4]அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது: சவுலே, சவுலே,
நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே
சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். [5]அதற்கு அவன்:
ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ
துன்பப்படுத்துகிற இயேசு நானே, முள்ளில் உதைக்கிறது
உனக்குக் கடினமாம் என்றார். [6]அவன் நடுங்கித் திகைத்து:
ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான்.
அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ
செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்.
[7]அவனுடனேகூடப் பிரயாணம்பண்ணின மனுஷர்கள்
சத்தத்தைக் கேட்டும் ஒருவரையுங் காணாமல் பிரமித்து
நின்றார்கள். [8]சவுல் தரையிலிருந்தெழுந்து, தன் கண்களைத்
திறந்தபோது ஒருவரையுங் காணவில்லை. அப்பொழுது
கைலாகு கொடுத்து, அவனைத் தமஸ்குவுக்குக்
கூட்டிக்கொண்டுபோனார்கள் [9]அவன் மூன்று நாள்
பார்வையில்லாதவனாய்ப் புசியாமலும் குடியாமலும்
இருந்தான்.*

*தமஸ்குவில் மிகவும் பெரிய யூத சமூகம் இருந்தது. கி.பி. 66 இல் சுமார் 20,000 யூதர்கள் படுகொலை செய்யப்பட்டதாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தமஸ்குவில் பல யூதர்களும் அவர்களுக்கான வழிப்பாட்டுத் தலங்களும் இருந்தன. தமஸ்கு என்ற இடம் எருசலேமின் மேற்கு பகுதியில் 160 மைல்களில் உள்ளன. இது பண்டைய காலத்தில் சிரியாவின் தலைநகரமாக இருந்தது.*

*தமஸ்குவில் கிறிஸ்தவர்கள் இருக்கும் அதே இடத்திலே தான் சவுலுக்கு வார்த்தை கிடைத்தது.*

*இதனை* ***அப்போஸ்தலர் 9:2, "இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும்."***

*வரலாற்று அறிஞர்களை பொறுத்த மட்டில், எருசலேமிலிருந்து தமஸ்கு வரை கூண்டு வண்டியில் (caravan) சென்றால் ஆறு நாட்கள் ஆகும். அவர்கள் தமஸ்குவின் எல்லை வரை சென்றனர்.*

*இதிலிருந்து மூன்று முக்கியமான செய்திக்கூறுகளை (points) நாம் பார்ப்போம்.*

1. *தேவனின் துவக்க முயற்சி (God's Initiative)*
2. *தேவனின் மெய்மையில் பற்றுறுதி (conviction)*
3. *மாற்றம்*

## *1. தேவனின் துவக்க முயற்சி (God's Initiative)*

***அப்போஸ்தலர் 9:3, அவன் பிரயாணமாய்ப் போய், தமஸ்குவுக்குச் சமீபித்தபோது சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது.***

*சவுலை சந்திப்பதற்கான முதல் அடியை தேவன் தான் எடுத்தார்.*

*தேவன் எப்படி முதலில் துவக்குகிறார் என்பதை மீண்டும் மீண்டுமாக நாம் அநேக சமயங்களில் கண்டுள்ளோம்.*

*பரிசுத்த ஆவியானவர் அனைத்து காரியங்களையும் தேவனுடைய சித்தத்திற்கேற்ப நடைபெறச் செய்தார்.*

*அப்போஸ்தலர் 8இல் நாம் பிலிப்பையும் எத்தியோப்பிய மந்திரியையும் பார்த்தோம்.*

*தேவனுடைய இறையாண்மை மற்றும் அவரது நோக்கம்.*

*நற்செய்தியில் உள்ள இரண்டு பத்தியங்களில் இருந்து பாவிகளை இரட்சிப்பதில் தேவனின் கிருபை உங்களுக்கு காண்பிக்கப்படும்.*

## ***கெட்ட குமாரன் (Prodigal son):***

***லூக்கா 15:11-30***

*கெட்ட குமாரனானவன், தனது தந்தைக்கே புறமுதுகு காட்டும் கற்பனைக்கு எட்டாத மிகவும் மோசமான பாவியாவான். அவன் தன்னுடைய சொத்தை எடுத்துக்கொண்டு வேறொரு நாட்டில் விபச்சாரிகள்மீதும் மோசமான வாழ்வில் செலவழித்தான். அவன் பணம் தீர்ந்த போது, பன்றிகள் தின்னும் உணவை தின்ன ஆரம்பித்தான். ஆனால் அவனால் அதனைக்கூட உண்ண முடியவில்லை.*

*அதனால் அவன் பஞ்சத்தின் நடுவே விரக்தியாக நின்றான். அவன் தன்னை அறிந்த போது திரும்பவும் தன் தந்தையிடம் செல்ல முடிவு செய்தான்.*

*அவன் திரும்பி அந்த கிராமத்தை நெருங்கிய போது அவனது தந்தை அவனை பார்த்துக்கொண்டிருந்தார். இந்த உவமையில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனை வெளிப்படுத்துகின்றர்.*

*அவனை தூரத்தில் இருந்து கண்டு,*

- ✓ *அவனிடம் ஓடிச் செல்கிறார்,*
- ✓ *தன்னுடைய கைகளால் அவனை கட்டித் தழுவுகிறார்,*
- ✓ *முத்தமிடுகிறார்,*
- ✓ *அவனுக்கு அங்கி அனுவிக்கிறார்,*

- ✓ *அவன் விரல்களில் மோதிரம் மாட்டினார் மேலும்*
- ✓ *அவனுக்கு நல்ல காலணிகளை அணிவிக்கின்றார்.*

*பாவியானவன் எதையாகிலும் செய்து தனது பாவத்தை சரி செய்ய முயற்சிப்பதற்கு முன்னரே கிறிஸ்துவில் தேவன் பாவியை முழுமையாக ஏற்றுக்கொள்கிறார் என்பதை இந்த கதையிலிருந்து நாம் பார்த்தோம். இது தான் கிருபையின் நற்செய்தி.*

*கிறிஸ்துவின் மூலமாக பிதாவிடம் வரும் ஒரு பரிவுள்ள பாவி, அத்தகைய கிருபையை பெறுவான்.*

## பரிசேயர் மற்றும் ஆயக்காரனும்:

***லூக்கா 18: 9-14,***

*தேவாலயத்திற்குள் ஒரு பரிசேயனும் ஒரு ஆயக்காரனும் ஜெபித்துக் கொண்டிருன்தனர்.*

*பரிசேயனானவர் தன்னுடைய ஜெபத்தில் தன்னுடைய அறநெறி மற்றும் மதத்தன்மை குறித்து தேவனிடம் கூறினார்.*

*ஆயக்காரனோ, வெளிப்படையான பாவியாக காட்டிக்கொண்டார்,*

- ✓ *தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல்,*
- ✓ *அவர் தனது தலை குனிந்தவனாய்,*
- ✓ *அவர் துயரத்தினால் தமது மார்பில் அடித்துக்கொண்டிருந்தார், மேலும்*

- ✓ *தன் மார்பிலே அடித்துக்கொண்டு; தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என ஜெபித்தார்.*

*அவனல்ல இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று இயேசு கூறினார்.*

*இரட்சிக்கப்படுகிற யாவரும் தேவனுடைய சர்வவல்லமையுள்ள வேலையினால் இரட்சிக்கப்பட்டார்கள். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் போன்று அனைவருக்கும் இந்த அனுபவம் இல்லை.*

*எனக்கு நிச்சயமாக இந்த அனுபவம் இல்லை!*

*உங்களுக்கும் இல்லை !!*

*யாருக்காவது இருக்கலாம் !!!*

*தேவன் அழைப்பு விடும்போது அவர் வழக்கமாக சத்தமில்லாத ஒரு மெல்லிய குரலில் அழைப்பு விடுகிறார். ஆனால் சவுலின் விஷயத்தில், அவர் எரியும், நசுக்கும், கசக்கும், பேரழிவு தோற்றத்தில் அழைப்பு விடுத்தார்.*

*அப்போஸ்தலர் 22 மற்றும் 26 ஆம் அதிகாரங்களில் அப்போஸ்தலினாகிய பவுலின் அனுபவ சாட்சியில் இதை காணலாம்.*

*நாம் இதிலிருந்து இந்த பின்வரும் விளக்கங்களை பெற்றுக்கொள்ளலாம்.*

*அது மதியம், உச்சக் கட்ட வெயில் நேரம்.*

*சூரியனின் பிரகாசத்தை காட்டிலும் அதிகமாகவும் அதிசயமாகவும், இயற்கைக்கு மாறானதாகவும், மதியம், உச்சக் கட்ட சூரியனின் ஒளியைக் காட்டிலும் பிரகாசமானது.*

*பவுலையும் அவரோடு பயணம் செய்த அனைவரையும் சுற்றிப் பிரகாசித்தது.*

*முழு குழுவும் பயத்தினால் தரையில் வீழ்ந்தனர். இது பரலோகத்திலிருந்து வந்த வெளிச்சம்.*

*அவருடன் வந்தவர்கள் எழுந்தனர், ஆனால் சவுல் தரையிலேயே இருந்தார்.*

*அவர்களால் அந்த ஒலியையும் சத்தத்தையும் கேட்டார்கள், ஆனால் அவர்களால் அதனை புரிந்து கொள்ள முடியவில்லை.*

*மற்றவர்கள் திகைத்து, சுற்றி ஊர்ந்து, அதை உணர முயற்சித்தார்கள் பிறகு முட்டாள்தனமாக குழப்பினார்கள்.*

*ஒளி சவுலை உடைத்து அவரை இயேசுவை காணச் செய்தது.*

***அப்போஸ்தலர் 9:17, அப்பொழுது அனனியா போய், வீட்டுக்குள் பிரவேசித்து, அவன்மேல் கையை வைத்து சகோதரனாகிய சவுலே, <u>நீ வந்தவழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர்</u>, நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான்.''***

***அப்போஸ்தலர் 22:14, அப்பொழுது அவன்: நம்முடைய முன்னோர்களின் தேவனுடைய திருவுளத்தை நீ அறியவும், நீதிபரரைத் தரிசிக்கவும், அவருடைய திருவாய் மொழியைக்கேட்கவும், அவர் உன்னை முன்னமே தெரிந்துகொண்டார்.***

*பவுல் தேவனை கண்டார்.*

***1 கொரிந்தியர் 15:8, எல்லாருக்கும் பின்பு, அகாலப்பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்.***

*யாருடைய இரட்சிப்பும் முற்றிலுமாக கடவுளால் ஆரம்பிக்கப்படுகிறது. சவுல் வேறு வழியாகச் செல்வோம் என்ற எண்ணம் கூட இல்லாமல் ஒரு வழியாகச் சென்றார். தேவனின் வல்லமை அவரை மாற்றியது.*

## 2. தேவன் அவரை மனத்திரும்புதலுக்கு உள்ளாக்குதல் *(God's conviction)*

***அப்போஸ்தலர் 9:4, அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது: சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான்"***

*பவுலுக்கு அவரைத் தாக்கியது என்னவென்றும் அவருடைய வெற்றியாளரின் காலடியில் விழவைத்தது என்னவென்றும் அறியாதிருந்தார்.*

*அவர் ஒரு பெயரை இரண்டு முறை கூப்பிட்டாலே அது எச்சரிக்கையாகும்.*

*"மார்த்தா, மார்த்தா."*

*"எருசலேம், எருசலேம்."*

*"சிமியோன், சிமியோன்."*

*"சவுல், சவுல்."*

*மறுபடியும் மறுபடியும் உரைப்பது என்பது அதனை உறுதிபடுத்துகிறார் என்பதே ஆகும்.*

*"ஏன் என்னை துன்புறுத்துகிறாய்? எந்த காரணத்திற்காக?"*

***யோவான் 15:25, முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று.'***

*"ஏன் என்னை துன்புறுத்துகிறாய்?"*

*இயேசு அங்கே இல்லை, அவர் பரலோகத்தில் இருந்தார். நம் தேவனானவர் நாம் அவர் நிமித்தம் துன்புறுத்தப்பட்டால் அதனை அவர் ஏற்றுக்கொள்கிறார். இப்படியாக அவர் தம்மை நம்முடன் அடையாளப்படுத்திக் கொள்கிறார்.*

*இயேசு தம் மக்களிடமிருந்து பிரிக்க முடியாதவராக இருக்கிறார். அவரது உடலில் உள்ள அனைத்து உறுப்பினர்களுடனும் அவர் பிணைக்கப்பட்டுள்ளார், இதனால் நமக்கு எதிராக இயக்கப்படும் ஒவ்வொரு வீச்சும் அவர் மீது விழுகிறது. இயேசு உண்மையிலேயே நம்முடன் அடையாளப்படுத்திக் கொள்கிறார்.*

---

***நம்மை துன்புறுத்துவது என்பது இயேசுவை துன்புறுத்துவது ஆகும்.***

---

*சவுல் இயேசுவின் மீது அடித்தார். பவுல் இதனை* ***கலாத்தியர் 6:17, "இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக; கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன்."***

*கிறிஸ்துவின் சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் கிறிஸ்துவின் அங்கத்தினராயிருக்கிறார்கள். அவர்கள் அவரோடு ஒன்றாக உள்ளனர். அவர் தான் அந்த உடலின் மகிமையான தலை ஆவார். அந்த அங்கத்தின் ஒரு நபர் இவ்வுலகில் தொடப்படும் போது, அது பரலோகத்திலும் உணரப்படுகிறது. அதைப்போலத் தான் நாமும் அவருடன் அடையாளப்படுத்திக் கொள்கிறோம்.*

***1 கொரிந்தியர் 16:22, ஒருவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் அன்புகூராமற்போனால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன், கர்த்தர் வருகிறார்!***

*பரிசுத்த ஆவியானவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்காததற்காக பாவியையும் மனதிரும்பச்செய்வதே அவரது வேலையாகும்.*

***யோவான் 16:9, அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும்;***

*இது தான் எல்லா குற்றத்தைக் காட்டிலும் பெரிய குற்றம்.*

*இது மன்னிக்க முடியாத குற்றம்.*

*இந்த குற்றத்திற்கு மன்னிப்பே கிடையாது.*

*"தேவ குமாரனை துன்புறுத்துகிறாய்" என்ற இந்த குற்றச்சாட்டினால் பவுல் நொறுங்கிவிட்டார். இது போன்ற ஒரு குற்றவுணர்வு தான் அவருடைய இருதயத்தில் இருந்திருக்கும்.*

***வ 5, "ஆண்டவரே, நீர் யார்?"***

*அவர் இதற்கு முன்னர் இயேசுவை கண்டதே இல்லை. அவர் அதற்கு முன்னர் இயேசுவை கண்டிருந்தாலும், இது இவ்வாறு*

*நடைப்பெற்றிருக்காது ஏனென்றால், இயேசு தம்முடைய மகிமையான நிலையில் இது போன்று இருந்திருக்க மாட்டார்.*

*அவர் இப்போது இவரை தேவன் என அறிக்கையிடுகிறார்!*

**அப்போஸ்தலர் *22:8*, அதற்கு நான்: ஆண்டவரே, நீர் யார் என்றேன். அவர்: நீ துன்பப்படுத்துகிற நசரேயனாகிய இயேசு நானே என்றார்*.'***

*இயேசு பவுலின் கவனத்தை கவர்ந்து, பயம் மற்றும் குற்றவுணர்வால் நிரப்பி, மேலும் "நானே நசரேயனாகிய இயேசு" என்ற தம்மை பற்றிய உண்மையை அவரிடம் கூறுகிறார்.*

*பவுல் (சவுல்) கிறித்தவர்களின் நற்செய்தியை நன்கறிந்திருந்தார். அவர் மிகவும் படித்த தத்துவ அறிஞர். இது மதங்களுக்கு எதிரான கொள்கை என்பதால் அவர் இந்த மக்களை கொன்றார்.*

*அவர்கள் என்ன கூறினார்கள் என்பதை பவுல் நன்கறிந்திருந்தார்.*

- ✓ *அவர்கள் அறிவித்தார்கள்,*
- ✓ *இவர் தான் மேசியா,*
- ✓ *இவர் தான் தேவ குமாரன்,*
- ✓ *இவரை தான் தேவன் நம்முடைய பாவங்களுக்கு பலியாக தேர்வு செய்துள்ளார்,*
- ✓ *இவர் மரணத்தில் இருந்து உயிர்த்தெழுந்துள்ளார், மேலும்*
- ✓ *இவரை தான் தேவன் நீதிமானாக அபிஷேகித்துள்ளார்.*

*ஸ்தேவான் கொலை செய்யப்பட்டதற்கு முன்னர் கூறிய கடைசி வார்த்தைகளை இவர் கேட்டிருக்கிறார்.*

*பவுல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சந்திப்பதற்கு முன்பு வரை அவர் இதனை மதங்களுக்கு எதிரான கொள்கை என்றும் தெய்வ நிந்தனையாகவும் கருதினார். அவர்கள் அவரை மரணத்தில் இருந்து உயிர்த்தெழுந்தார் என கூறினர். இப்போது அது இவருக்கும் தெரியும்.*

*இயேசு உயிருடன் உள்ளார்.*

*அவர் தான் தேவனின் குமாரன்.*

*அவர் தான் மேசியா.*

*தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கும் மகிமைக்குரியவர் அவர்.*

*இப்போது சவுல் நொறுங்கிப்போய், மனந்திரும்பி, உடைந்து, கிறிஸ்துவின் கிருபையை பெற கீழே கிடந்தார்.*

*ஒரு பக்கத்தில் அவருடைய இதயம் மனந்திரும்புதலினாலும் சோகத்தினாலும் உடைந்திருந்தது. மறு பக்கத்தில் அவர் விசுவாசத்தினால் குணமடைந்தார்.*

*பவுல் தன்னுடைய இருதத்தில் நடந்ததை தன்னுடைய ஆவிக்குரிய மகனான தீமோத்தேயுவிடம் கூறினார்.*

*1* ***தீமோத்தேயு*** *1:12-17,* [12] ***என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன்.*** [13] ***முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்; அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச்செய்தபடியினால்***

***இரக்கம்பெற்றேன். [14]நம்முடைய கர்த்தரின் கிருபை கிறிஸ்து இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தோடும் அன்போடுங்கூட என்னிடத்தில் பரிபூரணமாய்ப் பெருகிற்று. [15]பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான். [16]அப்படியிருந்தும், நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசுகிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும்பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படிக்கு இரக்கம்பெற்றேன். [17]நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாமொருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.***

*அப்போஸ்தலர் 9இல் நடந்தது புறம்பான ஒன்றாகும்!*

*அவர் தன்னுடைய பிளிப்பியருக்கான நிருபத்தில் தனது அகத்திற்குள் நடைப்பெற்றத்தை கூறியுள்ளார்.*

***பிலிப்பியர் 3:7-11, [7]ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்கு நஷ்டமென்று எண்ணினேன். [8]அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். [9]நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப் பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை***

***உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், [10]இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற் கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், [11]அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்.***

*அவருடைய பேச்சு வார்த்தை அங்கேயே முடிவுற்றது! இதனை மிகவும் தெளிவாக அவருடைய சாட்சியில் இருந்து புரிந்து கொள்ளலாம்.*

***அப்போஸ்தலர் 22:8-10, [8]அதற்கு நான்: ஆண்டவரே, நீர் யார் என்றேன். அவர்: நீ துன்பப்படுத்துகிற நசரேயனாகிய இயேசு நானே என்றார். [9]என்னுடனேகூட இருந்தவர்கள் வெளிச்சத்தைக்கண்டு, பயமடைந்தார்கள்; என்னுடனே பேசினவருடைய சத்தத்தையோ அவர்கள் கேட்கவில்லை. [10]அப்பொழுது நான்: ஆண்டவரே, நான் என்னசெய்யவேண்டும் என்றேன். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, தமஸ்குவுக்குப் போ; நீ செய்யும்படி நியமிக்கப்பட்டதெல்லாம் அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்.'***

*ஒரு உண்மையான பேச்சுவார்த்தையின் முதல் மறு மொழி என்ன?*

*சமர்ப்பணம்/ கீழ்ப்படிதல் மற்றும் இயேசு ஆண்டவர் என அறிக்கையிடுதல்.*

*இப்போது அவருக்கு ஒரு புது தலைவர் வந்துள்ளார்!*

*அவர் அவரை தேவன் என கூறினார். இயேசுவே தேவன் என்ற உண்மையை அவர் அடையாளம் கண்டுகொண்டுள்ளார்.*

**அப்போஸ்தலர் *9:6-9,* [6]அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். [7]அவனுடனேகூடப் பிரயாணம்பண்ணின மனுஷர்கள் சத்தத்தைக் கேட்டும் ஒருவரையுங் காணாமல் பிரமித்து நின்றார்கள். [8]சவுல் தரையிலிருந்தெழுந்து, தன் கண்களைத் திறந்தபோது ஒருவரையுங் காணவில்லை. அப்பொழுது கைலாகு கொடுத்து, அவனைத் தமஸ்குவுக்குக் கூட்டிக்கொண்டுபோனார்கள் [9]அவன் மூன்று நாள் பார்வையில்லாதவனாய்ப் புசியாமலும் குடியாமலும் இருந்தான்.**

*அவர் என்ன செய்தார்?*

*மூன்று நாட்களுக்கு அவர் என்ன செய்தார்?*

*பவுல் தன்னுடைய புது தலைவரோடு ஆலோசித்துக் கொண்டிருந்தார்.*

- *அவர் ஆதரவற்றிருந்தார்*
- *நண்பர்கள் அற்றிருந்தார்*
- *அவருடைய நண்பர்கள் இப்போது அவருடைய எதிரிகள் ஆனார்கள்.*

*அவருடைய பேச்சுவார்த்தையின் போது என்ன ஆனது?*

**கலாத்தியர் *1:15,* "அப்படியிருந்தும், நான் என் தாயின் வயிற்றிலிருந்தது முதல், என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்,"**

*தேவன் ஏற்கனவே இந்த மனிதனின் இரட்சிப்பை முன்குறித்து வைத்திருந்தாரா?*

*ஆம், தேவன் ஒவ்வொரு மனிதனின் இரட்சிப்பையும் முன்குறித்து வைத்துள்ளார்.*

*ஒரு மனிதன் ஒரு திசையில் தலை குனிந்து செல்லும் போது திடீரென தலைகீழாக மாறும்போது நிறுத்தி நேர்மாறான திசையில் செல்கிறார் என்றால் அதற்கு ஒரு பக்திகரமான விளக்கம் இருக்க வேண்டும்.*

*தேவன் அவரை இரட்சித்தார்.*

*தேவன் அவருடைய அந்தகாரத்திற்குள் நுழைந்து அவரை மாற்றினார்.*

*இது தேவனாலே துவக்கப்பட்டது ஏனென்றால் அவர் தேவனாலே தெரிந்து கொள்ளப்பட்டவர்.*

*அவர் தன்னுடைய தாயின் கருவில் இருந்தே பிரித்தெடுக்கப்பட்டவர்.*

*அவரது தாயின் கருப்பையில் அவரது கரு உருவான கணம், அவருக்கான தேவனுடைய நோக்கம் துவங்கிவிட்டது.*

*"தேவன் என்னை அழைத்தார்"*

*அது தமஸ்கு சாலையில் இரட்சிப்புக்கு ஒரு பயனுள்ள அழைப்பு.*

*"அவருடைய கிருபையினால்."*

*தேவன் தம்முடைய கிருபையினால் துவக்கினார்.*

*"அவரது மகனை எனக்கு வெளிப்படுத்தினார்,"*

*ஏன்?*

*"அவரை நான் புறஜாதிகளுக்குள்ளே பிரசங்கிக்கும்படிக்கு இப்படிச் செய்தார்."*

*நோக்கம் வெளியானது.*

*இது தான் தேவனின் வேலை.*

- ✓ *தேவன் தேர்ந்தெடுக்கிறார்,*
- ✓ *கிருபையால் விளைந்த அழைப்பை கடவுள் மீண்டும் உருவாக்குகிறார்,*
- ✓ *விசுவாசம் பிறப்பதற்காக தேவன் அவருடைய குமாரனை வெளிப்படுத்துகிறார்,*
- ✓ *தேவனுடைய மகனுடன் இணைந்திருந்தார்,*
- ✓ *புறஜாதிகளுக்கு ஒரு போதகர் ஆனார், மேலும்*
- ✓ *அவர் துன்புறுத்தியவருக்கு பிரசங்கியாக மாறினார்.*

### *3.* மாற்றம்

*இது மனிதனால் நடத்தப்பட்ட வேலை அல்ல.*

*நான் மனிதர்களிடமிருந்து இதைப் பெறவில்லை என்பதை மாற்றத்திற்கு முன்னதான என்னுடைய நிலை நிரூபிக்கும்.*

*என்னுடைய பேச்சு எல்லாம் தேவனை பற்றியது.*

*தமஸ்கு சாலையில் நான் என்ன செய்து கொண்டிருந்தேன்?*

*கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதற்காக பிரதான ஆசாரியரிடமிருந்து நான் ஆவணங்கள் வைத்திருந்தேன்.*

*இயேசுவை விசுவாசிப்பவர்களை கைய்து செய்யும் பொருட்டு நான் தமஸ்குவிற்கு சென்றுகொண்டிருந்தேன்.*

*நான் இரண்டாம் தர (second-hand) அப்போஸ்தலன் அல்ல.*

*யாரும் எனக்கு இந்த செய்தியை அளிக்கவில்லை.*

*இயேசு தமஸ்கு சாலையில் தம்மை வெளிப்படுத்தினார்.*

***1 கொரிந்தியர் 1:1, "தேவனுடைய சித்தத்தினாலே இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப் பட்டவனாகிய பவுலும்."***

*தேவனுக்குப் பிரியமாயிருந்தபோது என்னை அழைத்தார் என்று அதனால்தான் அப்போஸ்தலனாகிய பவுலால் சொல்ல முடிந்தது.*

*என் தாயின் வயிற்றிலிருந்து என்னைத் பிரித்தெடுத்த கர்த்தர், என்னை தெரிந்து கொண்டு மேலும் என் மீது வேலை செய்யவும் துவங்கியுள்ளார். ஆச்சர்யமாக உள்ளது!*

*அதே தான் யோவான் ஸ்நானகன் பற்றியும் கூறப்பட்டுள்ளது!*

***லூக்கா 1:15, அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான், திராட்சரசமும் மதுவும் குடியான், தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்.***

*ஏசாயா மேசியாவை குறித்து தீர்க்கதரிசனம் உரைத்துள்ளார்.*

***ஏசாயா 49:1, "தீவுகளே, எனக்குச் செவிகொடுங்கள்; தூரத்திலிருக்கிற ஜனங்களே, கவனியுங்கள்; தாயின் கர்ப்பத்திலிருந்ததுமுதல் கர்த்தர் என்னை அழைத்து, நான் என் தாயின் வயிற்றில் இருக்கையில் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தினார்.***

***எரேமியா 1:5, "நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார்."***

*அவர் பிறப்பதற்கு முன்னரே தேவன் அவர்களை தெரிந்து கொண்டார். அவர்கள் உண்மையான தேவனை குறித்து உலகிற்கு அறிவுக்கும் படி தெரிந்து கொண்டார்.*

***அப்போஸ்தலர் 9***, *பவுல் தெரிந்து கொள்ளப்பட்டார்.*

***அப்போஸ்தலர் 13***, *அவர் பிரித்தெடுக்கப்பார்.*

*அவர் பிறப்பதற்கு முன்னரே தேவன் அவர்களை தெரிந்து கொண்டார். அவருக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.*

*இது மனிதர்களால் பெறப்பட்டது அல்ல. இது தேவனால் செய்யப்பட்டது.*

*தேவன் அவரை அழைத்தார். தேவன் அவருக்கு ஒரு வாழ்வை தந்தார். அவர் அதற்கு பதிலளித்தார்.*